ஈ. வனபுறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்பவர்கள் வனத் துறை அதிகாரிகளால் வெளியேற்றப்பெறுவது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். அண்ணாமலை, பி, எ. கிருஷ்ணன், வி. கே. கோதண்டராமன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர்

''தருமபுரி மாவட்டம், மந்திகுளாம்பட்டி, பெரியபட்டி, கீரப் பட்டி, ஒண்ணக்கறத் தரப்பு, கும்பனூர் ஆகிய கிராமங்களி லுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்துவரும் விவசாயிகளை வனத்துறை அதிகாரிகள் வெளியேற்ற முற்பட்டுள்ள தால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

''தருமபுரி மாவட்டம், மந்திகுளாம்பட்டி, பெரியபட்டி, கீரப்பட்டி, ஊத்தங்கரை வட்டம், ஒண்ணக்கறத்தரப்பு, கும்ப னூர் ஆகிய கிராமங்களிலுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்துவரும் விவசாயிகளை வனத்துறை அதிகாரிகள் வெளியேற்ற முற்பட்டுள்ளதால் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து''

* திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை, மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10—30.)

திரு, ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே. சர்வே புல எண். 1 மந்திகுளாம்பட்டி சர்வே புல எண். 4 பெரியபட்டி ஆகிய கிராமங்களின் கீழ்வரும் பகுதிகள் மந்திகுளாம்பட்டி வன வட்டாரத்தில் அடங்கும். இது வன மீன் துறை 1—3—1978 நாளிட்ட 142-ம் எண் ஆணையில் தமிழ்நாடு வனச்சட்டத்தின் 4-வது பிரிவின் படி அறிக்கை யிடப்பட்டது. வன நிலவரி ஏற்பாட்டுப் பணியைக் கவனிக்கவும், கிராமத்தினரிடமிருந்து வருகின்ற கோரிக்கைகளை விசாரிக்கவும். தனி வட்டாட்சியரை (Special Tahsildar) நிய மித்து இந்த வன வட்டாரத்தை, ஒதுக்க வனமாக அமைப்பதற் காகவே இவ்வாறு அறிக்கை இடப்பட்டது, வன நிலவரி ஏற் பாட்டுக்கால அளவில், தனி வட்டாட்சியருக்கு (வன நிலவரி ஏற்பாடு) 110 கோரிக்கைகள் அனுப்பப்பட்டன, கோரிக்கை செய்து கொண்டவர்கள் மேற்படி பகுதியின் மீது தங்களின் உரிமைகளை மெய்ப்பிக்காததால் கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை, தனி வட்டாட்சியர் எடுத்த

1979 ஏப்ரல் 27] [திரு. ஜசரி வேலன்]

முடிவின் மீது செய்யும் மேல்முறையீட்டுகளை விசாரிக்கும் அதிகாரம் தருமபுரி பின்தங்கிய வகுப்பினர் நல அதிகாரியிடம் இருக்கிறது. தனித் தாசில்தார் எடுத்த முடிவிற்கு எதிராக மேல் முறையீடு எதுவும் இதுவரையில் மேல்முறையீட்டு அதிகாரிக்குக் கிடைக்கவில்லை. மேல்முறையீட்டுக்கால அளவு முடிவடைந்ததும் இப்பகுதி ஒதுக்க வனமாக அமைக்கப்படும். ஈண்டு குறிப்பிட்டுள்ள பகுதியில் மரம் நடும் திட்டம் எதுவும் இல்லை. இதுவரையில் நில வெளியேற்ற நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை. நில ஆக்கிரமிப்புகள் ஏதேனும் இருப்பின் பிறகு தான் அகற்றப்படும்.

சர்வே புல எண். 52 கும்பனூர் கிராமத்தின்கீழ் வரும் பகுதியைப் பொறுத்தமட்டில் அதன் பரப்பளவு 381 ஏக்கர் (154·18 ஹெக்டேர்). இதனை தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின் 72ஏ பிரிவின்படி எடுத்துக்கொண்டு ஒதுக்க வனமாக அமைப்பதற்கு வனத்துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச்சட்டத் தின் 4-வது பிரிவின்படி செயற்குறிப்புகள் எதுவும் தொடங்கப் படவில்லை. இப்பகுதியில் மரம் நடும் பணியும் எடுத்துக்கொள்ளப் படவில்லை.

சர்வே புல எண். 1 கீரப்பட்டி கிராமம், ஹரூர் வட்டத்தைச் சேர்ந்த பகுதியின் பரப்பளவு 641·95 ஏக்கர் (259·78 ஹெக் டேர்) ஆகும். இதில் 45·09 ஏக்கர் (18·25 ஹெக்டேர்) நில ஆக்கிரமிப்பின்கீழ் இருக்கிறது. நில ஆக்கிரமிப்புப் பகுதி நீங்கலாக இப்பகுதியை வனத்துறைக்கு மாற்றுவதற்கான செயற் குறிப்பு ஒன்று உள்ளது. இது தருமபுரி மாவட்ட வன அலுவல ருக்கும் வருவாய்த்துறைக்குமிடையே கடிதப் போக்குவரத்தி லுள்ளது,

மேற்சொன்ன சர்வே புல எண்ணில் 190·43 ஏக்கர் (77·1 ஹெக்டேர்) பரப்பளவு சம்பந்தப்பட்ட ஊராட்சியிடமிருந்து அவசியமான இசைவு பெற்றபின் வன வளர்ப்பு பிரிவு திட்டத்தின் கீழ் 1977–78-ல் மரங்கள் நடப்பட்டன. 135.85 ஏக்கர் பரப்பளவு (55 ஹெக்டேர்) 1978-ம் ஆண்டில் மரம் நடுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் திரு எம், தாண்டவ ராயன் மற்றும் சிலரிடமிருந்து மனு ஒன்று கிடைத்ததன் பேரில் இந்தப் பகுதியில் மேற்கொண்டு மரம் நடுவது நிறுத்திவைக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் (தருமபுரி மாவட்ட ஆட்சி யருக்காக) சேலம், வன வளர்ப்பு விரிவாக்கத் திட்டம், கோட்ட வன அலுவலரைக் கேட்டுக்கொண்டார். மேற்சொன்ன உத்திரவுகளின்படி இப்பகுதியில் மேற்கொண்டும் மரம் நடும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பகுதியில் நில ஆக்கிரமனம் செய்துள்ள பெரும்பாலோர் நிலமற்ற ஏழையர் அல்லர் என்றும், ஆனால், பணக்கார பட்டாதாரர்கள் என்றும், பொதுவாக துறையினர் மரம் நடுவதைத் தடுப்பதற்காக புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது,

இதை ஒட்டி பதட்ட நிலை ஏதும் ஏற்படவில்லை,

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அமைச்சர் செயலர் அவர்களுடைய அறிக்கையில், மந்திகுளாம்பட்டி சர்வே நெ. 4-ம் பெரியபட்டி சர்வே நெ.1லும் 4-1ல் உள்ள நிலங்கள் வனத்துறையின் கட்டுக்கோப்புக்குள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தில் கடந்த 30, 40 ஆண்டு காலமாக ஏழை மக்கள் இருந்து வருகிறார்கள். கிணறு வெட்டியிருக்கிறார்கள். கொட்டகைகளை போட்டு, தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அளவுக்கு சாகுபடி செய்து வருகிறார்கள், இதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். இப்போது அந்த கொட்டகைகளில் இருப்பவர்களை எல்லாம் வெளியேற்றுவதற்கான முயற்சியில் வனத்துறை அதிகாரிகள் இறங்கியிருக்கிறார்கள், அவர்களை வெளியேற்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொல்வது சரியல்ல. மேலும் இங்குள்ளவர்கள் யாரும் மனு செய்து கொள்ளவில்லை என்று சொல்லுகிறார்கள், அதுவும் உண்மைக்கு மாறானது என்று அனைவரும் மனு கொடுத்துள்ளார்கள். இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென குறிப்பிட விரும்புகிறேன். அதோடு கீரப்பட்டி-1 என்ற இடத்தில் உள்ள நிலங்களில் மரங்கள் நடுவதை இப்போது நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், மிகவும் நன்றி. மேலும் இதில் பூராவுமே பெரும் நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல, இரண்டொரு பேர்கள் இருப்பார்கள், அவர்களிடமிருந்து நிலங்களை எடுத்து நிலமற்றவர்களுக்கு கொடுக்கவேண்டும், அதோடு அங்குள்ள நிலங்களை தவிர்க்க முடியாத நிலையில் எடுக்க நேர்ந்தால் அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக வேறு இடங்களில் நிலங்களை கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதோடு பல இடங்களில் கலெக்டரின் ஸ்டே உத்தரவு இருந்தும், பலபேர்கள் மீது பொய்யான வழக்குகள் போடப்பட்டு வருகின்றன, அவைகளையும் அரசு பரிசீலனை செய்து ரத்து செய்வதற்கும் ஏழைக்குப் பாடுபடும் பட்டா வழங்கவும் ஆவன செய்யுமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்,

திரு, ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நிலமற்ற ஏழைகள் அந்தப் பகுதிகளிலே நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருந்தால், நிச்சயமாக இதுபற்றி இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 27]

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, அங்கே வசதி படைத்தவர்கள். வீடு இல்லாத, நிலம் இல்லாதவர்கள் யாரும் இல்லை என்று அமைச்சர் செயலர் சொன்னார்கள். அதைப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள், 100-க்கு 80 சதவிகிதம் வீடு இல்லாத, நிலமில்லாத அப்பேர்ப்பட்டவர்கள்தான் 30 வருஷ காலமாக தரிசோ அல்லது தரிசு இல்லாத நிலத்திலோ கிணறுகள் வெட்டி, அதை சமப்படுத்தி, வாழ்க்கை நடத்திக் கொண்டு வருகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லக்கூடிய நேரத்திலே, சர்க்கார் இப்படிப்பட்டவர்களை நிலத்திலே இருந்து வெளியேற்றுவது சரியா? ஆகவே, அவர்களுக்கு பட்டா வழங்குவதோடு, ஒருவேளை பட்டா வழங்கவில்லை என்று சொன்னால், நஷ்ட ஈடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கண்டிப்பாக பட்டா வழங்குவதுதான் முறை, அப்போதுதான் உண்மையிலேயே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். எனவே, அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே கூறினேன், உண்மையிலேயே நிலமற்ற ஏழைகள் அந்தப் பகுதியிலே விவசாயம் செய்வதற்கு அல்லது அவர்கள் வாழ்வதற்கு வழிவகை இருப்பதாகக் கருதினால், அதே நேரத்திலே வன வளர்ச்சிக்கு ஊறு ஏற்படாத வகையில் அவர்களுடைய கோரிக்கை இருந்தால், பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வேண்டுகோள் என்னவென்று சொன்னால், படித்த அறிக்கை 5-6 பக்கங்கள் இருக்கும், இப்படிப்பட்ட ஒரு அறிக்கையைப் படிப்பதற்குப் பதிலாக, முன்னமே கொடுத்துவிட்டால், நேரமும் மிச்சமாகும், நாங்களும் படித்துக்கொள்ள முடியும், இந்த மாதிரி இனி ஏற்பாடு செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே, முதலில் நடத்திய விசாரணையில் உரிமை நிரூபிக்கப் படவில்லை, பரிசீலனையில் இருக்கின்றது என்று அமைச்சர் செயலர் சொன்னார்கள். குறிப்பிட்ட விவசாயிகள் மனுக்கள் போடவில்லை என்று சொல்கிறார்கள். மனுக்கள் போட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, மீண்டும் விசாரணை செய்வதோடு அந்த விசாரணையை வனஇலாகாவிலே உள்ளவர்களை கொண்டு நடத்தாமல் மற்றவர்களை கொண்டு

விசாரித்து உண்மையிலேயே பயிர்செய்து கொண்டிருந்த விவசாயி களுக்கு பட்டா கொடுப்பதற்கு ஒரு விசேஷ ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இதையும் இந்த அரசு விரை வில் பரிசீலிக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது மலையை ஒட்டிய நிலங்கள் வளமாகவும், நீர்பிடிப்பு உள்ள தாகவும் இருப்பதால், அந்த நிலங்களை நிலமில்லாதவர்கள் கேட்கிறார்கள். அதைப் பரிசீலிக்கவேண்டும். அதோடு நான் கேட்க விரும்புவது இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்மீது சில பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக நீக்குவதற்கு, வாபஸ் பெற ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு நான் கோருவது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றுதான் கேட்க லாம். அதோடு, அதோடு என்று திரு. கிருஷ்ணன் போன்ற உறுப் பினர்கள் கேட்பது முறையல்ல, அதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : பொதுவாக கெஸ்ட் அவுஸ் என்று பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட், தொழிலதிபர்கள் வனத் துறைக்கு சம்பந்தமில்லாமல் வெகு தொலைவில் இருக்கக்கூடிய நிலங்களை வனத் துறை நிலங்கள் என்று டிக்ளேர் செய்து, நிலமில்லாத ஏழைகளை வெளியேற்றவும், பயிர்செய்வதை தடைசெய்ய வும் படுகிறது. இந்த அரசு அதற்கு என்ன ஏற்பாடு செய்யப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொய் வழக்குகள் யார் மீதும் போடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலே தவறு இருந்தால், அது குறித்தும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

டாக்டர் கே. சமரசம் : கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம் தொகுதியில் கிருஷ்ணகிரி அணைத் திட்டப் பகுதியில் பாதிக்கப் பட்ட மக்கள் ஏழை விவசாயிகள் அந்தக் காட்டிலே பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகிறார்கள். இத்தனை ஆண்டு காலமாக இருந்த அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று வனத் துறை

1979 ஏப்ரல் 27]

நோட்டீஸ் கொடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா? வேண்டுமானால் கோர்ட்டில் அப்பீல் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு இதை கவனத்தில் கொண்டு அந்த நிலங்களில் குடியிருந்து கொண்டு உழுது பயிரிட்டுக் கொள்ள வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : ஏழை விவசாயிகள் அந்த இடங்களில் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால், நிச்சயமாக அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : கிருஷ்ணகிரி-தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திற்கு. . . .

திரு. பொ. விஜயராகவன் : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் தான் கேள்வி கேட்க முடியும். இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த திருவாளர்கள் அண்ணாமலை, கிருஷ்ணன், கோதண்டராமன், சொரணம் ஆகியோர் தவிர மற்றவர்களுக்கு கேள்வி கேட்க தற்போது அனுமதிக்கப்பட்டிருப்பது எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில பெயர்கள் விடுபட்டுப்போய் பிறகு என்னிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். திரு. விஜயராகவன் கூர்ந்து கவனத்திருக்கிறார்கள். இதுபோன்ற தவறுகள் மறுபடியும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : தருமபுரியில் நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு 1955-ல் இருந்து காட்டு நிலங்கள் கொடுக்கப்பட்டு அவர்கள் அந்த நிலங்களில் உழுது வருகிறார்கள். தற்போது அரசு உத்தரவின்பேரில் காட்டு இலாக்கா அதிகாரிகள் புகுந்து ஏழைகள் அந்த நிலத்தில் உழ முடியாமல் தடுத்து வேலி போட்டிருக்கிறார்கள். அந்தக் காட்டு நிலத்திற்குள் சென்றால் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. ஆகவே, அந்த ஏழைகளுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : அப்படி நிலத்தைப் பயிரிட்டுக் கொண்டிருந்தவர்கள், நிலத்தை அரசு எடுத்துக்கொண்டதற்காக அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச்.ஜி. ஆறுமுகம் : தாண்டவன் என்பவர் விண்ணப்பத்தைக் கொடுத்தவுடன் நிலத்தில் செடிகளை நடவில்லை என்று சொல்லி மற்ற ஏழை எளியவர்கள் மீது வனத்துறை பதிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பதிவை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : இதுபற்றிய தகவல்களை அரசு கவனத்திற்குக் கொண்டுவந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உ. செம்பாகுறிச்சி அரிசனங்கள் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை அடைக்கப் பெற்றுள்ளது குறித்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

''சின்னசேலம் ஒன்றியத்தில் செம்பாகுறிச்சி ஊராட்சியில் வாழும் அரிசனங்களுக்கான சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையை, சாதி இந்துக்கள் வ்வசாயம் செய்ய பயன்படுத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து''.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே. சின்னசேலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிழக்கு கீழ்குப்பம் புறப்பகுதி காவல் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் செம்பக்குறிச்சி கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்கு வடக்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பொது புதைப்பிடம் ஒரு ஏக்கர் விஸ்தீரண நிலம் அரசு புறம்போக்கு ஆர். எஸ். எண். 26-1 என்ற நிலத்தில் உள்ளது. அரிசனங்கள், வள்ளுவப்பண்டாரம், மூப்பர்கள், படையாச்சிகள் உட்பட எல்லா ஜாதி மக்களும் அவரவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதியில் பிணத்தைப் புதைப்பது வழக்கமாக இருந்து வருகிறது என்றாலும் இப்போது அப்பகுதியில் இதுவரை யாரும் விவசாயம் செய்யவில்லை. மேலும், அந்த இடுகாட்டிற்குச் செல்லும் வழிக்குப் பக்கத்தில் திரு. சந்திரகாச படையாச்சியின் மகன் திரு. பாலகிருஷ்ண படையாட்ச்சி என்பவர் 3 சென்ட் நிலத்தில் மிளகாய் செடி பயிரிட்டிருக்கிறார். பருவக்காலங்களில் மேலும் ஒரு சில ஜாதி இந்துக்களும் வழக்கமாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால், யாருடைய எதிர்ப்புமின்றி பிணங்கள் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. விவசாயம் செய்வதால் பிணத்தை இடுகாட்டில்